# இருவழி பாதையாக அண்ணாசாலை இன்றும், நாளையும் சோதனை ஓட்டம்

**சென்னை, செப். 11–**

மெட்ரோ ரயில் நிலைய கட்டுமான பணிகள் நிறைவு பெற்றதால், அண்ணா சாலை, இரு வழிபாதையாக மாற்றப்பட்டு, இன்றும், நாளையும், சோதனை ஓட்டம் நடைபெறும் என, போலீசார் அறிவித்துள்ளனர்.

போலீசார் நேற்று வெளியிட்டுள்ள அறிவிப்பு:

- அண்ணா சாலையில், ஒயிட்ஸ் சாலை சந்திப்பில் இருந்து, வெல்லிங்டன் சந்திப்பு வரை, இரு வழிப்பாதையாக மாற்றப்படுகிறது
- வெல்லிங்டன் சந்திப்பில் இருந்து, ராயப்பேட்டை மணிக்கூண்டு வரை, வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்படுகிறது



- ஒயிட்ஸ் சாலை, இரு வழிபாதையாக மாற்றப்படுகிறது
- அண்ணா மேம்பாலத்தில் இருந்து, அண்ணா சிலை நோக்கி செல்லும் வாகன போக்குவரத்தில் மாற்றம் இல்லை
- அண்ணா சிலையில் இருந்து, ஜெமினி அல்லது தேனாம்பேட்டை செல்லும் வாகனங்கள், எல்.ஐ.சி., மற்றும் டி.வி.எஸ்., வழியாக, அண்ணா மேம்பாலம் செல்லலாம்
- அண்ணா சிலையில் இருந்து, பின்னி சாலை வழியாக செல்ல முயலும் வாகனங்கள், ஸ்பென்சர் வலது புறமாக திரும்பி செல்லலாம்
- பாரதி சாலை வழியாக செல்லும் வாகனங்கள், ஒயிட்ஸ் மற்றும் ஜி.பி.ரோடு வழியாக, அண்ணா சாலையை அடையலாம்
- அண்ணா சாலையில் இருந்து, ஸ்மித் சாலை வழியாக ஒயிட்ஸ் சாலை செல்ல தடை செய்யப்படுகிறது
- ஒயிட்ஸ் சாலையில் இருந்து, அண்ணா சாலை செல்லும் வாகனங்கள், திரு.வி.க., சாலையில் இடதுபுறம் திரும்பி, பின், சத்தியம் தியேட்டர், கான் டான் சுமித் சாலை சந்திப்பு, பீட்டர்ஸ் சாலை வழியாக செல்லலாம்.
- அண்ணா சாலையில், ஜி.பி.ரோடு முதல், ஒயிட்ஸ்சாலைவரை, 10 ஆண்டுகளுக்கு பின், இரு வழிபாதையாக மாற்றப்பட்டு, இன்றும், நாளையும் நடக்கும் சோதனை ஓட்டத்திற்கு வாகன ஓட்டிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு, போலீசார் அறிவித்துள்ளனர்.